முன் மாதிரி முதல் இடைப் பருவத் தேர்வு --- 2

மேல்நிலை முதலாம் ஆண்டு

கணக்குப்பதிவியல்

நேரம் : 1.15 மணி　　　　　　　　　　　　மதிப்பெண் : 45

## பகுதி ---- I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**　　　　10 × 1 = 10

1. நிதித் தகவல்களின் அகப் பயனாளராகக் கருதப்படுபவர் --------- ஆவார்.
   அ) பணியாளர்　ஆ) கடனீந்தோர்　இ) வாடிக்கையாளர்　ஈ) மேற்கண்ட அனைவரும்

2. இந்தியாவில், கணக்கியல் தரநிலைகளை வழங்கும் அமைப்பு -----------
   அ) இந்திய மைய வங்கி　ஆ) உச்சநீதி மன்றம்
   இ) இந்தியப் பட்டயக்கணக்காளர் நிறுவனம்　ஈ) இவற்றுள் ஏதுமில்லை

3. உரிமையாளரால், வணிகத்திலிருந்து எடுக்கப்படும் தொகை வரவு வைக்கப்படும் கணக்கு
   அ) எடுப்புகள் கணக்கு　ஆ) ரொக்கக்கணக்கு
   இ) முதல் கணக்கு　ஈ) மேற்கண்ட ஏதுமில்லை

4. ஒரு கணக்கின் வரவு மொத்தத்தைவிட பற்று மொத்தம் அதிகமாக இருப்பின் அதன் பொருள் ---
   அ) வரவு இருப்பு　ஆ) பற்று இருப்பு　இ) இருப்பு இன்மை　ஈ) மேற்கண்ட ஏதுமில்லை

5. ஒரு இருப்பாய்வு தயாரிக்கப்படுவது ------
   அ) ஆண்டு இறுதியில்　ஆ) ஒரு குறிப்பிட்ட நாளில்
   இ) ஒரு பருவகாலம் முடிந்ததும்　ஈ) மேற்கண்ட அனைத்தும்

6. கீழ்கண்டவற்றில் எது புலனாகா சொத்து -------------
   அ) நிலம்　ஆ) நற்பெயர்　இ) அறைகலன்　ஈ) கணினி

7. கணக்கியல் சமன்பாடு என்பது ஒரு -------- வெளிப்பாடாகும்.
   அ) கணிதவியல்　ஆ) அறிவியல்　இ) வணிகவியல்　ஈ) அ மற்றும் இ

8. கணக்கியல் சமன்பட்டின்படி சரியாக இல்லாதது எது?
   அ) சொத்துக்கள் = பொறுப்புகள் + முதல்　ஆ) சொத்துக்கள் = முதல் + பொறுப்புகள்
   இ) பொறுப்புகள் = சொத்துக்கள் + முதல்　ஈ) முதல் = சொத்துக்கள் - பொறுப்புகள்

9. பின்வருவனவற்றில் எது சரியாக பொருந்தவில்லை?
   அ. இரட்டைத் தன்மை கருத்து --- ஒவ்வொரு நடவடிக்கையும் அல்லது நிகழ்வும் இரண்டு தன்மைகளைக் கொண்டிருக்கும்.
   ஆ. பணமதிப்பீட்டுக் கருத்து --- பணத்தால் அளவிடமுடியாத நடவடிக்கைகள் மட்டுமே கணக்குகளில் பதியப்படவேண்டும்.
   இ. கணக்கேடுகள் பராமரிப்பு --- கணக்கியலின் ஒரு பகுதியாகும்.
   ஈ. முன்னெச்சரிக்கை மரபு --- எச்சரிக்கையாக அல்லது பாதுகாப்பாக செயல்படும் கொள்கையாகும்.

10. கீழ்க்கண்ட கணக்குகளில் எந்தக்கணக்கின் இருப்பு, இருப்பாய்வில் பற்றுப் பத்தியில் தோன்றும்?
    அ) பற்பல கடனாளிகள் க / கு　ஆ) வங்கி கடன் க / கு
    இ) வட்டி பெற்றது க / கு　ஈ) முதல் க / கு



## பகுதி - II

**எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 16 –க்கு கட்டாயம் விடையளிக்கவும்.**　　4 × 2 = 8

11. ஆதார ஆவணங்கள் என்றால் என்ன?

12. ஆதார ஆவணங்கள் எவற்றையெல்லாம் உள்ளடக்கியுள்ளது?

13. 2018, மார்ச் 15 ஆம் நாள் ரமேஷ் என்பவர் தனது கடனீந்தோரான தினேஷ் என்பவருக்கு கொடுக்கவேண்டிய ₹. 15,000 க்கு பதிலாக ₹. 13,800 செலுத்தி அவர்கணக்கைத் தீர்த்துக் கொண்டார். தகுந்த குறிப்பேட்டுப் பதிவினை தயார் செய்க.

14. கீழ்க்காணும் கணக்குகளில் தோன்றும் இருப்புகளைக் குறிப்பிடுக.
    1. முதல்　2. விற்பனை　3. கடனாளிகள்　4. கடனீந்தோர்

15. கனக்கியல் சமன் பாட்டில் விடுபட்ட தகவல் மற்றும் தொகையினைக் காண்க.
    அ) ஒரு நிறுவனத்தின் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் முறையே ₹. 25,000 மற்றும் ₹. 18,000
    ஆ) மற்றொரு நிறுவனத்தின் பொறுப்புகள், முதல் முறையே ₹. 45,000 மற்றும் ₹. 55,000.

16. கணக்கியல் தகவல்களில் பின்வரும் பயனீட்டாளர்கள் ஏன் ஆர்வமாக உள்ளனர்?
    (அ) முதலீட்டாளர்கள்　(ஆ) அரசு

## பகுதி - III

**எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 22 -க்கு கட்டாயம் விடையளிக்கவும்.**　　4× 3 = 12

17. கணக்கியல் நோக்கங்கள் யாவை? ( எதேனும் 3 )

18. கீழ்கண்ட விவரங்களில் இருந்து ரொக்க பேரேட்டினை தயார் செய்க.

| | | |
|---|---|---|
| i) | ரொக்க விற்பனை | ₹. 5,000 |
| ii) | ராஜியிடம் பெற்ற ரொக்கம் | ₹. 4,000 |
| iii) | கழிவு பெற்றது | ₹. 500 |

19. கணக்கியல் சமன்பாட்டின்ப்பாட்டில் விடுபட்ட தொகையினைக் கண்டுபிடி.

| | சொத்துகள் | = | முதல் | + | பொறுப்புகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | 80,000 | = | ? | + | 38,000 |
| (ஆ) | ? | = | 11,000 | + | 21,000 |
| (இ) | 20000 | = | 15000 | + | ? |

20. <u>கீழ்க்கண்ட நடவடிக்கைகளுக்கு குறிப்பேட்டுப்பதிவு தருக.</u>
    ராம் என்பவர் ஆகஸ்ட், 31, 2018 அன்று சம்பளம் கொடுத்தது ₹. 15,000, மின் கட்டணம் செலுத்தியது ₹. 8,000 மற்றும் கூலி கொடுத்தது ₹. 2,000

21. கீழ்கண்ட கணக்குகளின் இருப்புகள் இருப்பாய்வில் பற்றுப் பத்தியில் இடம் பெறுமா அல்லது வரவுப் பத்தியில் இடம் பெறுமா எனக் காட்டிடுக:
    1. வெளித்தூக்குக்கூலி　2. வாராக்கடன்　3. வட்டிச் செலுத்தியது
    4. விற்பனைத்திருப்பம்　5. தொடக்கச் சரக்கிருப்பு　6. பயணச்செலவுகள்

22. குறிப்பேட்டின் நன்மைகளில் ஏதேனும் மூன்றினை எழுதுக

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** $3 \times 5 = 15$

23. திரு. ஆனந்தன் அவர்களின் ஏடுகளில் கீழ்கானும் நடவடிக்கைகளைக் குறிப்பேட்டில் பதிவு செய்க.

| 2018 | | ₹. |
|---|---|---|
| மார்ச் | 1. திரு. ஆனந்தன் தொழில் தொடங்கியது | 42,000 |
| | 3. காசோலை கொடுத்து சரக்கு வாங்கியது | 10,000 |
| | 5. இணைய வங்கி மூலம் பணம் செலுத்தி கொள்முதல் செய்தது | 7,000 |
| | 11. அலுவலக செலவுகளுக்கு வங்கியிலிருந்து பணம் எடுத்தது | 15,000 |
| | 12. மணியிடமிருந்து ₹. 13,000 க்கான சரக்குகள் வாங்கப்பட்டு, அதற்கான தொகை எடுப்பு அட்டை மூலம் செலுத்தப்பட்டது. | |
| | 30. வாடகை செலுத்தியது | ₹. 7,000 |

( அல்லது )

பின்வரும் வணிக நடவடிக்கைகளின் விளைவுகளை கணக்கியல் சமன்பாட்டில் காண்பிக்கவும்.

(i) அன்பு, ரொக்கம் ₹. 20,000 ; சரக்குகள் ₹. 12,000 மற்றும் இயந்திரம் ₹. 8,000 ஆகியவற்றுடன் தொழில் தொடங்கினார்

(ii) ரமணியிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது ₹. 7,000

(iii) ரமணிக்கு ₹. 6,900 கொடுத்து கணக்கு முழுவதும் தீர்க்கப்பட்டது

(iv) ₹. 5,400 மதிப்புள்ள சரக்குகள் கடனுக்கு இராஜனுக்கு விற்கப்பட்டது ₹. 6,000

(v) இராஜனிடமிருந்து ₹. 5,800 பெற்றுக்கொண்டு அவரது கணக்கு முடிக்கப்பட்டது

24. பின்வரும் இருப்பாய்வினை சரிசெய்யவும்.

| விவரம் | பற்று ( ₹ ) | வரவு ( ₹ ) |
|---|---|---|
| முதல் | 1,20,000 | |
| விற்பனை | | 75,000 |
| கொள்முதல் | 45,000 | |
| சம்பளம் | 6,000 | |
| வாடகை | 4,500 | |
| காப்பீட்டு முனைமம் | | 900 |
| எடுப்புகள் | | 15,000 |
| இயந்திரம் | 84,000 | |
| வங்கி | | 13,500 |
| ரொக்கம் | 13,500 | |
| பற்பலகடனாளிகள் | | 23,100 |
| பற்பல கடனீந்தோர் | 10,500 | |
| மொத்தம் | **2,05,500** | **2,05,500** |

( அல்லது )



கீழ்கண்ட விவரங்களில் கொடுக்கப்பட்டுள்ள விளக்கக் குறிப்பிலிருந்து குறிபேட்டுப்பதிவில் விடுபட்டதொகையினையும், அதன் கணக்குகளையும் கண்டுபிடித்து, முழுமையான குறிப்பேட்டில் எழுதவும்.

<u>கமலா ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்</u>

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2003 அக்.1 | ----------- ப<br>-----------<br>( கமலா ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ) | | 2,00,000 | --------- |
| 5 | -------------- ப<br>-------------------<br>(சம்பளம் ரொக்கமாக வழங்கியது) | | 40,000 | ---------- |
| 11 | ------------- ப<br>----------<br>(சொந்த பயனுக்காக ரொக்கம் எடுத்தது) | | ---------- | 12.500 |
| 21 | ----------------- ப<br>-----------------<br>( ரொக்கமாக பெற்ற கழிவு) | | 12,000 | 12,000 |
| 30 | ----------------- ப<br>-----------------<br>(தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் மூலம் பணம் எடுத்தது) | | 7,000 | 7,000 |

25. திரு. முத்து அவர்களின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட இருப்புகளைக் கொண்டு 31. 12. 2016 ஆம் நாளைய இருப்பாய்வு தயாரிக்க.

1) சம்பளம் ₹. 5,000 2) முதல் ₹. 34,000 3) கடனீந்தோர் ₹. 1,000
4) கொள்முதல் ₹ 10,000 5) கடனாளி ₹. 9,,000 6) விற்பனை ₹. 16,000
7) உள் ஏற்றிச்செல் செலவு ₹. 1,000 8) இயந்திரம் ₹. 20,000 9) எடுப்புகள் ₹.4,000
10) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு ₹. 2,000

( அல்லது )

திரு.ராஜா அவர்களின் குறிப்பேட்டில் கீழ்க்காணும் நடவடிக்கைகளைப் பதிவு செய்து, பேரேட்டில் எடுத்தெழுதி, இருப்புகளைக் காண்க.

| 2018 செப்டம்பர் | | ₹. |
|---|---|---|
| 1 | தொழில் தொடங்கியது | 40,000 |
| 5 | வங்கியில் நடப்புக் கணக்குத் தொடங்கியது | 25,000 |
| 12 | திருமதி.ரதியிடம் கொள்முதல் செய்தது | 15,000 |
| 18 | திருமதி.ரதிக்கு செலுத்தியது | 15,000 |
| 20 | திருமதி.சுசித்ராவிற்கு விற்பனை செய்தது | 35,000 |